**<u>பட்டதாரி பயிலுனர்களாக பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரிகளை</u>**
**<u>கிழக்கு மாகாண மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களுக்காக</u>**
**<u>இலங்கை ஆசிரியர் சேவை, 3-I(அ) தரத்துக்கு மாவட்ட ரீதியாக ஆட்சேர்ப்பு செய்தல் – 2022</u>**

கிழக்கு மாகாண மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவை, 3-I(அ) தரத்துக்கு மாவட்ட ரீதியாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான சாதாரண நேர்முகப்பரீட்சைக்கு இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் தகைமைகளையுடைய கிழக்கு மாகாணத்தில் கீழே குறிப்பிடப்பட்ட வருடங்களில் பட்டதாரி பயிலுனர்களாக பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட கிழக்கு மாகாணத்தில் நிரந்தர வதிவிடமாக கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. **இணைப்பு 01**இல் காணப்படும் பாடங்கள் தொடர்பாக அகில இலங்கை ரீதியில் விண்ணப்பிக்க முடியும். கிழக்கு மாகாணத்தை வதிவிடமாக கொண்ட விண்ணப்பதாரிகள் போதியளவு இல்லாதவிடத்து, அவ்வாறான விண்ணப்பங்கள் கருத்தில் கொள்ளப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி **2022.03.31** ஆகும். இச்சாதாரண நேர்முகப்பரீட்சையானது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதிக்கு பின்னர் விரைவில் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் நடாத்தப்படும்.

## 01. தகைமைகள் :

### 1.1 பொதுத் தகைமைகள் :

1.1.1. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

1.1.2. சிறந்த நல்லொழுக்கமும் சிறந்த உடல் உள ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

1.1.3. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதியன்று 18 வயதுக்கு உட்படாமலும் 35 வயதிற்கு மேற்படாதாவாறும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு : **"2020 பட்டதாரிகளை தொழில்களில் ஈடுபடுத்தும் வேலைத்திட்டம்" இன் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பயிலுனர்களின், 2020.01.01ம் திகதியிலிருந்து மற்றும் 2021.01.01 ஆம் திகதிக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வயது 2019.12.31 ஆம் திகதிக்கு 35 க்கும் குறைவாக கருதப்படும்.**

1.1.4. விண்ணப்பதாரி கீழே குறிப்பிட்ட வகையின் கீழ் இதுவரை ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரி பயிலுனராக/ அபிவிருத்தி உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

i. பட்டதாரிகளை தொழில்களில் ஈடுபடுத்தும் செயற்றிட்டம் - 2020 இன் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரியாக இருத்தல் வேண்டும்

அல்லது

ii. 2018 மற்றும் 2019ம் ஆண்டுகளில் நடைபெற்ற "பட்டதாரி பயிலுனர்களுக்கு அரச நிறுவனங்களில் பயிற்சி வழங்குதல்" திட்டத்தின் கீழ் பட்டதாரி பயிலுனராக பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 01.01.2020 மற்றும் 01.01.2021ம் திகதியிலிருந்து அபிவிருத்தி உத்தியோகத்தராக நிரந்தர நியமனம் பெற்ற உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்

அல்லது

iii. பட்டதாரிகளை தொழிலில் ஈடுபடுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் 2020, 2019 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட டிப்ளோமாதாரியாக இருத்தல் வேண்டும்

குறிப்பு : **ஒவ்வொரு பாடத்திற்கும் போதியளவு பட்டதாரி இல்லாத பட்சத்தில் மட்டும் குறித்த ஆளனி வெற்றிடத்திற்கு டிப்ளோமாதாரி ஒருவரின் விண்ணப்பம் கருத்தில் கொள்ளப்படும்.**

### 1.2 கல்வித் தகைமைகள் :

1.2.1. இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அமைவாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பிக்கும் பாடம் பிரதான பாடமாக கொண்ட பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும். **<u>விண்ணப்பிக்கும் பாடம் பிரதான பாடமாக கொண்ட பட்டம் ஒன்றை பெற்றுக்கொண்டதாக உரிய பல்கலைக்கழகம் / நிறுவனத்திடம் இருந்து (பல்கலைக்கழகமாயின், பதிவாளரிடமிருந்து மட்டும்) கடிதம் ஒன்றை பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பி வைக்க வேண்டும். அவ்வாறு கடிதம் ஒன்று இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.</u>**

அத்துடன்,

1.2.2. க.பொ.த (சா/த) பரீட்சையில் சிங்களமொழி அல்லது தமிழ்மொழி பாடத்தில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

**02. ஆட்சேர்ப்பு முறையும் சேவை நிபந்தனைகளும் :**

2.1 இந்த அறிவித்தலுக்கு அமைவாக வெற்றிடங்கள் நிலவுகின்ற பாடங்களுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்காக, கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் சாதாரண நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும். இந்த சாதாரண நேர்முகப்பரீட்சைக்கு புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது. நேர்முகப்பரீட்சையில் ஆட்சேர்ப்பிற்கான தகைமைகள் காணப்படும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் பிரயோகப்பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர். பிரயோகப்பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் முன்னுரிமை வரிசை ஒழுங்கின்படி காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைவாக ஆட்சேர்ப்பு நடைபெறும்.

2.2 ஆட்சேர்ப்பின்போது கிழக்கு மாகாணத்தில் வதியும் விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவிட மாவட்டத்தை நியமனத்தின்போது முதலாவது மாவட்டமாக கருதப்படும். அம்மாவட்டத்தில் வெற்றிடங்களை முழுமையாக நிரப்பிய பின்னர், விண்ணப்பதாரியினால் விண்ணப்பித்த பாடம்/பாடங்களிற்கமைவாக வேறொரு மாவட்டத்தில் வெற்றிடம் காணப்படுமிடத்து, விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "**விண்ணப்பிக்கும் மாவட்டம்**" என்ற பகுதியில் குறிப்பிடும் மாவட்டங்களின் முன்னுரிமை வரிசை ஒழுங்கின்படி நியமனம் வழங்குவதற்கு கருத்தில் கொள்ளப்படுவர். பிற மாகாணத்திலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "**விண்ணப்பிக்கும் மாவட்டம்**" என்ற பகுதியில் குறிப்பிடும் மாவட்டங்களின் முன்னுரிமை வரிசை ஒழுங்கின்படி நியமனம் வழங்குவதற்கு கருத்தில் கொள்ளப்படுவர்.

**2.3** வெற்றிடங்கள் காணப்படும் வலயங்கள் மற்றும் பாடங்கள் **இணைப்பு - 02**இல் தரப்பட்டுள்ளது.

2.4 விண்ணப்பதாரியினால் விண்ணப்பிக்கப்படும் பாடம் பின்னர் எக்காரணம் கொண்டும் மாற்றப்படமாட்டாது. அதே போன்று அது தொடர்பாக முன்வைக்கப்படும் மேன் முறையீடுகள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

2.5 மாவட்ட அடிப்படையில் இந்த வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதனால் 10 ஆண்டுகள் முடிவடையும் வரை எவ்வகையிலும் இடமாற்றம் வழங்கப்படமாட்டாது. அத்துடன் நியமனம் வழங்கப்படும் பாடசாலையில் 10 வருடங்கள் சேவையாற்ற வேண்டும். எனினும் சேவை தேவைகளின் நிமிர்த்தம் இந்த நிபந்தனைகளை மாற்றும் அதிகாரம் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு உண்டு. இது தொடர்பில் சேவை ஒப்பந்தமொன்றினை கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருடன் செய்து கொள்வதற்கு உடன்படுதல் வேண்டும்.

2.6 இவ் நியமனம் பெற்றுக்கொள்வது தற்காலிக அடிப்படையில் வழங்கப்பட்டு 3 ஆண்டுகளினுள்ளே இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் 7.2.4.1க்கமைய நடைபெறும் ஆட்சேர்ப்பு பரீட்சையில் சித்திபெறற்றுள்ளவர்களுக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்படும். போட்டிப்பரீட்சையில் சித்தியடைதவர்களுக்காக ஒரு வருடத்தினுள் மீண்டும் பரீட்சை நடாத்ததுவது தொடர்பாகவோ முதலில் உள்ள பதவிக்கு நியமனம் வழங்குவது தொடர்பாகவோ பட்டதாரி பயிலுநராக அபிவிருத்தி உத்தியோகத்தராக இணைக்கப்படுவது செய்யப்படும். பரீட்சையில் சித்தியடையாத டிப்ளோமாதாரிகளின் சேவை முடிவுறுத்தப்படும்.

2.7 அரச நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பின் மூலம் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக் குறிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இதற்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்புகளுக்கும் கட்டுப்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் பட்டதாரிகள் இலங்கை ஆசிரியர் சேவையின் 3-I (அ) தரத்திற்கு நியமிக்கப்படுவர். இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் 2022.01.05 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை 03/2016(IV) இற்கு அமைவாக இருக்கும் என்பதோடு இந்த நியமனத்திற்கான சம்பள முறைமை GE-1-2016 சம்பள வகுதியின் கீழ் மாதாந்தம் ரூபா. 31,490 – 445 x 6 – 525 x 7 – 600 x 2 – ரூபா. 39,035/- ஆகும். இச்சம்பள அளவுத்திட்டத்தின் 14 ஆவது படிநிலையில் பட்டதாரிகள் அமர்த்தப்படுவர்.

2.8 இப்பதவி நிரந்தரமானதாகும். ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் வகுக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு கீழ்ப்படிதல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்ட விதிகளுக்கு அமைய சேவை நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும்.

2.9 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1885/38 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பில் 7.2.3.4 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைவாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் என்பதோடு பதவியுயர்வுகள் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக்குறிப்புக்கு அமைவாக மேற்கொள்ளப்படும். அதேபோன்று இந்த அறிவித்தலில் கருத்தில் கொள்ளப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அந்த சந்தர்ப்பம் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு ஏற்புடையதாகும்.

2.10 அனைத்து விண்ணப்பபதாரிகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னதாக பதவிக்கு ஏற்புடைய அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியிருத்தல் அவசியமானதாகும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் கோரப்பட்டுள்ள தகைமைகளுக்குரிய பரீட்சைப் பெறுபேறுகள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும்

விண்ணப்பங்கள் தவறொன்றாக கருதப்படும் என்பதுடன் தகுதியற்றவர்களின் விண்ணப்பங்களும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

**03. விண்ணப்பிக்கும் முறை :**

3.1 இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய A4 (21cmx29cm) அளவிலான தாளின் இரு பக்கங்களையும் **மட்டும்** உபயோகித்து, **இல 1.0 தொடக்கம் 5.2 வரை முதலாம் பக்கத்திலும், இல. 5.3 தொடக்கம் 11.0 வரை தாளின் இரண்டாம் பக்கத்திலும்** உள்ளடங்குமாறு விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

3.2 விண்ணப்பத்துடன் கீழே குறிப்பிடப்பட்ட ஆவணங்களும் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

- மேலே 1.1.4இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளை நிரூபிக்கும் நியமனக்கடிதத்தின் போட்டோ பிரதி
- பட்டச்சான்றிதழின் போட்டோ பிரதி
- பெறுபேற்று விபரச்சான்றிதழ் (Transcript)
- மேலே 1.2.1இல் குறிப்பிடப்பட்ட சான்றிதழ்

3.3 **உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமையாதவையும், பிழையின்றி பூரணப்படுத்தப்படாதவையும், மாதிரி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பரீட்சைக் குறியீட்டு இலக்கமின்றியும், உரிய விண்ணப்ப முடிவுத்திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிக்கப்படாதவையும், முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.** உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத்தவறுவதால் ஏற்படும் நட்டத்திற்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3.4 அட்டவணை 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்கான கல்வித்தகைமைகளை பார்வையிட்டு தங்களின் பட்டத்திற்குரித்தான பாடங்களுக்காக மாத்திரம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவும். ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களுக்காக விண்ணப்பிப்பதாயின், ஒவ்வொரு பாடங்களுக்கும் தனித்தனி விண்ணப்பங்கள் தயாரிக்கப்படின் அவற்றை வேறு வேறான கடித உறையில் இட்டு அனுப்புதல் வேண்டும். ஒவ்வொரு பாடங்களுக்காகவும் விண்ணப்பிக்கும்போது தனித்தனியாக விண்ணப்பிக்காது ஒரே விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பித்தால் அவ்விண்ணப்பப்படிவம் எந்தவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

3.5 விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பமானது, நிறுவனத்தின் /திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர் / திணைக்களத்தலைவர் முன்னிலையில் இடப்பட்டு அதனை அப்பதவிநிலை உத்தியோகத்தர் / திணைக்களத்தலைவர் சான்றுப்படுத்தி திணைக்களத்தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும். **அரச / கிழக்கு மாகாண சேவையிலுள்ள அலுவலரொருவர் விண்ணப்பிப்பதாயின்,** விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பமானது, திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர் / திணைக்களத்தலைவர் முன்னிலையில் இடப்பட்டு அதனை அப்பதவிநிலை உத்தியோகத்தர் / திணைக்களத்தலைவர் சான்றுப்படுத்தி திணைக்களத்தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும்.

3.6 முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **2022.03.31** ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப இறுதித்திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். நீங்கள் அஞ்சல் செய்த விண்ணப்பம் தொலைந்து போனாலோ அல்லது காணாமல் போனாலோ அதற்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு பொறுப்பேற்கமாட்டாது. **(விண்ணப்பத்தை செயலாளரின் தனிப்பட்ட பெயருக்கு அனுப்புவதை தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.)**

செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம்,
198, உட்துறைமுக வீதி, திருகோணமலை

3.7 விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் பரீட்சைக் குறியீட்டு இலக்கம் **EX/Rec/22/02** என்பதை குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

**04. சாதாரண நேர்முகப்பரீட்சை மற்றும் பரீட்சைக்கான அனுமதி :**

முழுமையாக விண்ணப்பத்தை பூர்த்தி செய்து விண்ணப்பங்களை அனுப்பி வைத்த அடிப்படைத் தகைமைகளையுடைய சகல விண்ணப்பதாரிகளுக்கும் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் சாதாரண நேர்முகப்பரீட்சைக்காக அழைப்புக்கடிதம் அனுப்பி வைக்கப்படும்.

**05. பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :**

சாதாரண நேர்முகப்பரீட்சையின் போது நேர்முகப்பரீட்சை சபையினால் விண்ணப்பதாரி தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட்)
இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

**06. பொய்யான தகவல்களை வழங்குவதற்குரிய தண்டனை :**

விண்ணப்பப்பத்திரங்களை பூர்த்தி செய்யும் போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். விண்ணப்பதாரியொருவர் சமர்ப்பிக்கின்ற ஏதேனும் தகவல் பொய்யானதென தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

**07. பிரயோகப்பரீட்சை :**

சாதாரண நேர்முகப்பரீட்சையில் தகைமை பெறும் விண்ணப்பதாரிகளுக்கு பிரயோகப்பரீட்சைக்காக விண்ணப்பதாரியினால் இனங்காணப்பட்ட தலைப்பின் கீழ் 05 நிமிட சமர்ப்பிப்பொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக கீழ் குறிப்பிடப்பட்டவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| **பிரயோக பரீட்சையில் புள்ளி வழங்கப்படும் ஒப்பளவுகள்** | **உயர்ந்த பட்ச புள்ளி அளவு** | **சித்தியடைவதற்கு தேவையான புள்ளி அளவு** |
|---|---|---|
| 01 நோக்கம் மற்றும் பிரவேசம் | 05 | 02 |
| 02 ஆளுமை மற்றும் குரல்வளம் | 05 | 02 |
| 03 தொடர்பு சாதனம் தொடர்பிலான விளக்கம் | 05 | 02 |
| 04 நேர முகாமைத்துவம் | 05 | 02 |
| 05 சமர்ப்பிப்புத் திறமைகள் | 05 | 02 |
| **மொத்தப் புள்ளிகள்** | **25** | **10** |

08. நேர்முகப்பரீட்சைக்கு குறித்த தினத்தில் சமூகமளிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளுக்கு பிறிதொரு தினத்தில் நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

09. தனது தகைமைகளை சான்றுப்படுத்துகின்ற சகல ஆவணங்களையும் நேர்முகப்பரீட்சைக்குழுவிற்கு நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிக்கும் தினத்திலேயே சமர்ப்பிக்க வேண்டும். நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்காத ஆவணங்கள் தொடர்பில் பின்னர் எக்காரணம் கொண்டும் கவனம் செலுத்தப்படமாட்டாது.

10. இந்த அறிவித்தலில் உள்ளடங்காத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பிலும், ஏதாவது விசேட காரணத்தினால் நேர்முகப்பரீட்சை நடாத்த முடியாமல் போகுமிடத்து அது தொடர்பிலும், இப்பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது, அவ்வெற்றிடத்தின் ஒரு பகுதியையோ அல்லது முழுமையாகவோ நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவது தொடர்பிலும், பட்டமொன்றின் செல்லுபடியாகும் தன்மை தொடர்பிலும் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் அறிவுரைக்கமைய அச்செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும்.

**மூ.கோபாலரெத்தினம்**,
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

**2022.03.08**

இணைப்பு 01

## Vacancies of Advanced Level in Eastern Province (Sinhala Medium)

| SubNo | Subject | Ampara | | | Trincomalee | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | AMPARA | DEHIATTAKANDIYA | MAHAOAYA | KANTHALE | MUTHUR | TRINCOMALEE | TRINCOMALEE NORTH |
| 20 | Chemistry | - | ✓ | ✓ | - | - | - | - |
| 21 | Physics | ✓ | - | ✓ | ✓ | - | - | ✓ |
| 22 | Biology | - | - | ✓ | ✓ | - | - | ✓ |
| 29 | Information & Communication Technology (ICT) | - | - | ✓ | ✓ | - | ✓ | - |
| 24 | Combined Mathematics | ✓ | ✓ | ✓ | ✓ | - | ✓ | ✓ |

## Vacancies of Secondary in Eastern Province (Sinhala Medium)

| SubNo | Subject | Ampara | | | Trincomalee | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | AMPARA | DEHIATTAKANDIYA | MAHAOAYA | KANTHALE | MUTHUR | TRINCOMALEE | TRINCOMALEE NORTH |
| 44 | Science | - | ✓ | - | ✓ | ✓ | ✓ | ✓ |
| 45 | Maths | ✓ | ✓ | ✓ | ✓ | - | ✓ | ✓ |
| 61 | Information & Communication Technology (ICT) | ✓ | ✓ | ✓ | ✓ | - | ✓ | ✓ |

இணைப்பு 02

## Vacancies of Advanced Level in Eastern Province (Sinhala Medium)

| SubNo | Subject | Ampara | | | Trincomalee | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | AMPARA | DEHIATTAKANDIYA | MAHAOAYA | KANTHALE | MUTHUR | TRINCOMALEE | TRINCOMALEE NORTH |
| 1 | Physical Education & Sports | - | - | - | - | - | ✓ | ✓ |
| 2 | Performing Arts | - | - | ✓ | - | - | - | ✓ |
| 3 | Fashion Designing | - | - | - | ✓ | - | - | - |
| 4 | Art & Designing | - | - | - | - | - | - | ✓ |
| 5 | Landscaping | - | ✓ | - | - | - | ✓ | - |
| 6 | Applied Horticulural Studies | - | - | - | ✓ | - | - | - |
| 7 | Livestock Product Studies | - | - | ✓ | - | - | - | - |
| 8 | Food Processing Studies | - | - | ✓ | - | - | - | - |
| 9 | Electrical and Electronic Studies | - | ✓ | | | - | - | ✓ |
| 10 | Aquatic Resource Studies | ✓ | - | - | - | - | - | - |
| 11 | Plantation Product Studies | ✓ | - | ✓ | | - | - | - |
| 12 | Construction Studies | - | - | | ✓ | - | - | - |
| 13 | Automobile Studies | ✓ | - | - | - | - | ✓ | - |
| 14 | Textile & Apparel Studies | ✓ | - | - | - | - | | - |
| 15 | Aluminum Fabrication Studies | - | - | - | - | - | ✓ | - |
| 16 | Computer Hardware & Networking (Web Des & Software Development) | - | ✓ | - | ✓ | - | ✓ | ✓ |
| 17 | Tourism & Hospitality | - | - | - | - | - | - | ✓ |
| 18 | General Information Technology (GIT) | ✓ | ✓ | ✓ | ✓ | - | ✓ | ✓ |
| 19 | English | ✓ | ✓ | ✓ | ✓ | - | ✓ | ✓ |
| 20 | Chemistry | - | ✓ | ✓ | - | - | - | - |
| 21 | Physics | ✓ | - | ✓ | ✓ | - | - | ✓ |
| 22 | Biology | - | - | ✓ | ✓ | - | - | ✓ |
| 23 | Agriculture Science | ✓ | ✓ | ✓ | - | - | - | ✓ |
| 24 | Combined Mathematics | ✓ | ✓ | ✓ | ✓ | - | ✓ | ✓ |
| 25 | Engineering Technology | - | ✓ | ✓ | ✓ | - | ✓ | - |
| 26 | Bio-System Technology | - | - | - | - | - | - | ✓ |
| 27 | Science for Technology | - | ✓ | - | ✓ | - | ✓ | ✓ |
| 28 | Economics | ✓ | ✓ | ✓ | ✓ | - | ✓ | ✓ |
| 29 | Information & Communication Technology (ICT) | - | - | ✓ | ✓ | - | ✓ | - |
| 30 | Geography | ✓ | ✓ | - | ✓ | - | ✓ | ✓ |
| 31 | Home Economy | ✓ | ✓ | - | - | - | - | - |
| 32 | Communication and Media Studies | ✓ | ✓ | ✓ | ✓ | - | ✓ | ✓ |
| 33 | Business Studies | ✓ | ✓ | ✓ | ✓ | - | ✓ | ✓ |
| 34 | Accounting | - | ✓ | - | - | - | - | - |
| 35 | Political Science | - | ✓ | - | ✓ | ✓ | ✓ | - |
| 36 | History (Indian/Europe/Modern World) | ✓ | - | ✓ | - | - | - | - |
| 37 | Agro Tech | ✓ | - | - | ✓ | - | - | - |
| 38 | Buddhist Civilization | ✓ | - | - | ✓ | ✓ | ✓ | ✓ |
| 39 | Dancing (Oriental) | - | - | ✓ | - | - | - | - |
| 40 | Drama & Theatre | - | - | ✓ | - | ✓ | - | ✓ |
| 41 | Sinhala (Language) | - | - | ✓ | - | - | - | ✓ |

# Vacancies of Secondary in Eastern Province (Sinhala Medium)

| SubNo | Subject | Ampara | | | Trincomalee | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | AMPARA | DEHIATTAKANDIYA | MAHAOAYA | KANTHALE | MUTHUR | TRINCOMALEE | TRINCOMALEE NORTH |
| 42 | Guidance & Counselling | ✓ | ✓ | - | ✓ | - | ✓ | - |
| 43 | Special Education Unit | ✓ | ✓ | ✓ | - | - | - | - |
| 44 | Science | - | ✓ | - | ✓ | ✓ | ✓ | ✓ |
| 45 | Maths | ✓ | ✓ | ✓ | ✓ | - | ✓ | ✓ |
| 46 | Sinhala | ✓ | ✓ | - | ✓ | - | ✓ | ✓ |
| 47 | History | ✓ | ✓ | ✓ | ✓ | - | ✓ | ✓ |
| 48 | Buddhism | - | - | - | ✓ | ✓ | ✓ | ✓ |
| 49 | (Religion Subjects) Roman Catholic | - | - | - | - | - | ✓ | - |
| 50 | (Religion Subject) Non Roman Catholic | - | - | - | - | - | ✓ | - |
| 51 | Geography | ✓ | ✓ | ✓ | ✓ | - | ✓ | ✓ |
| 52 | Civic Education | ✓ | - | ✓ | ✓ | - | ✓ | ✓ |
| 53 | Business & Accounting Studies | - | ✓ | - | - | - | - | - |
| 54 | Entrepreneurship Education | ✓ | - | ✓ | ✓ | - | ✓ | ✓ |
| 55 | Second Language (Tamil) | ✓ | ✓ | ✓ | ✓ | - | - | ✓ |
| 56 | Music (Oriental) | ✓ | - | ✓ | ✓ | - | ✓ | ✓ |
| 57 | Art | ✓ | ✓ | - | ✓ | ✓ | ✓ | ✓ |
| 58 | Dancing (Oriental) | - | ✓ | - | - | - | - | - |
| 59 | Drama & Theatre | - | - | - | - | - | ✓ | - |
| 60 | Literature (Sinhala) | - | - | - | ✓ | - | - | - |
| 61 | Information & Communication Technology (ICT) | ✓ | ✓ | ✓ | ✓ | - | ✓ | ✓ |
| 62 | Agriculture & Food Technology | - | ✓ | ✓ | - | - | - | - |
| 63 | Art & Crafts | - | - | ✓ | - | - | - | - |
| 64 | Communication & Media Studies | ✓ | - | ✓ | - | - | ✓ | - |
| 65 | Home Economics | - | ✓ | ✓ | - | - | - | - |
| 66 | Practical & Technical skills (PTS) | ✓ | ✓ | ✓ | ✓ | - | ✓ | ✓ |
| 67 | Design & Construction Technology | - | - | ✓ | ✓ | - | - | ✓ |
| 68 | Health & Physical Education | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |

# Vacancies of Advance Level in Eastern Province (Tamil Medium)

| | | Ampara | | | | Batticaloa | | | | | Trincomalee | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| SubNo | Subject | AKKARAIPATTU | KALMUNAI | SAMMANTHURAI | THIRUKKOVIL | BATTICALOA | BATTICALOA CENTRAL | BATTICALOA WEST | KALKUDAH | PADDIRUPPU | KANTHALE | KINNIYA | MUTHUR | TRINCOMALEE |
| 101 | Child Psychology & Care | - | ✓ | - | - | - | - | ✓ | - | - | - | - | ✓ | - |
| 102 | Health & Social Care | - | ✓ | - | - | - | - | - | ✓ | - | - | - | - | - |
| 103 | Physical Education & Sports | - | - | - | ✓ | - | ✓ | - | - | - | - | ✓ | - | - |
| 104 | Graphic Design | - | ✓ | ✓ | - | - | - | ✓ | - | - | - | ✓ | - | ✓ |
| 105 | Event Management | - | - | ✓ | - | - | - | - | ✓ | - | - | - | - | - |
| 106 | Art & Craft | - | - | - | ✓ | ✓ | ✓ | - | - | ✓ | - | - | - | - |
| 107 | Interior Designing | - | - | - | - | - | - | ✓ | - | - | - | - | - | - |
| 108 | Fashion Designing | - | - | - | - | - | - | - | - | ✓ | - | - | - | ✓ |
| 109 | Art & Designing | - | - | ✓ | - | - | - | - | - | - | - | - | - | - |
| 110 | Landscaping | - | - | ✓ | - | ✓ | - | - | - | - | - | - | - | - |
| 111 | Applied Horticultural Studies | - | - | - | - | - | - | - | - | - | - | - | ✓ | - |
| 112 | Livestock Product Studies | - | - | ✓ | ✓ | ✓ | - | - | ✓ | - | - | - | ✓ | ✓ |
| 113 | Food Processing Studies | - | - | - | - | ✓ | - | - | - | ✓ | - | - | - | - |
| 114 | Electrical and Electronic Studies | - | - | - | - | - | - | ✓ | ✓ | - | - | - | ✓ | - |
| 115 | Aquatic Resource Studies | - | - | - | - | ✓ | - | - | - | - | - | - | - | - |
| 116 | Plantation Product Studies | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | ✓ |
| 117 | Construction Studies | - | - | - | - | ✓ | ✓ | - | ✓ | ✓ | - | ✓ | - | ✓ |
| 118 | Automobile Studies | - | - | - | ✓ | ✓ | - | ✓ | ✓ | ✓ | - | ✓ | ✓ | ✓ |
| 119 | Textile & Apparel Studies | - | - | - | - | - | - | ✓ | ✓ | ✓ | - | - | ✓ | ✓ |
| 120 | Metal Fabrication Studies | - | ✓ | ✓ | - | - | - | - | ✓ | - | - | - | - | - |
| 121 | Aluminum Fabrication Studies | - | - | ✓ | - | - | - | ✓ | - | - | - | - | ✓ | - |
| 122 | Computer Hardware & Networking (Web Des & Software Development) | - | - | - | - | - | - | ✓ | ✓ | - | - | - | - | ✓ |
| 123 | Manufacturing | - | ✓ | ✓ | - | - | - | - | ✓ | ✓ | - | - | - | - |
| 124 | Tourism & Hospitality | - | - | - | ✓ | ✓ | ✓ | ✓ | - | - | - | - | ✓ | - |
| 125 | General Information Technology (GIT) | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 126 | English | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 127 | Chemistry | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | - | ✓ |
| 128 | Physics | ✓ | ✓ | - | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 129 | Biology | ✓ | - | - | ✓ | - | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | - | ✓ | - |
| 130 | Agriculture Science | ✓ | - | ✓ | - | - | - | - | - | - | - | - | - | - |
| 131 | Combined Mathematics | - | - | ✓ | - | ✓ | ✓ | - | ✓ | ✓ | ✓ | - | - | ✓ |

| SubNo | Subject | Ampara | | | | Batticaloa | | | | | Trincomalee | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | AKKARAIPATTU | KALMUNAI | SAMMANTHURAI | THIRUKKOVIL | BATTICALOA | BATTICALOA CENTRAL | BATTICALOA WEST | KALKUDAH | PADDIRUPPU | KANTHALE | KINNIYA | MUTHUR | TRINCOMALEE |
| 132 | Engineering Technology | - | ✓ | ✓ | - | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | - | ✓ | ✓ | ✓ |
| 133 | Bio-System Technology | - | ✓ | ✓ | - | - | ✓ | ✓ | ✓ | ✓ | - | - | ✓ | - |
| 134 | Science for Technology | - | ✓ | - | - | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | - | ✓ | ✓ | ✓ |
| 135 | Information & Communication Technology (ICT) | ✓ | ✓ | - | - | ✓ | ✓ | ✓ | ✓ | - | - | - | - | ✓ |
| 136 | Accounting | - | - | - | - | ✓ | ✓ | ✓ | - | - | ✓ | - | - | - |
| 137 | Business Studies | - | - | - | ✓ | - | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | - | - | ✓ |
| 138 | Economics | - | ✓ | - | - | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | - | - | ✓ |
| 139 | Geography | ✓ | ✓ | ✓ | ✓ | - | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 140 | Political Science | - | - | ✓ | - | - | - | - | - | - | ✓ | - | ✓ | - |
| 141 | History (Indian/Europe/Modern World) | - | ✓ | ✓ | - | ✓ | - | ✓ | ✓ | ✓ | - | - | ✓ | - |
| 142 | Logic & Scientific Method | - | - | - | - | - | - | - | ✓ | - | - | - | ✓ | - |
| 143 | Home Economy | - | - | ✓ | - | - | - | - | ✓ | ✓ | - | - | | - |
| 144 | Arabic | - | - | - | - | - | ✓ | - | - | - | - | - | - | - |
| 145 | Food and Technology | - | ✓ | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 146 | Agro Tech | ✓ | ✓ | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 147 | Communication & Media Studies | - | ✓ | ✓ | ✓ | ✓ | - | ✓ | ✓ | ✓ | - | ✓ | ✓ | - |
| 148 | Christianity (N.R.C) | - | - | ✓ | - | ✓ | - | - | - | - | - | - | - | - |
| 149 | Christian Civilization | - | - | - | - | - | - | - | - | - | - | - | ✓ | - |
| 150 | Hindu Civilization | - | - | ✓ | - | - | - | ✓ | ✓ | ✓ | - | - | ✓ | ✓ |
| 151 | Islam | ✓ | ✓ | ✓ | - | - | ✓ | - | - | | ✓ | ✓ | ✓ | ✓ |
| 152 | Islam Civilization | - | - | - | - | - | ✓ | - | - | - | - | - | - | ✓ |
| 153 | Art | - | - | ✓ | - | - | ✓ | ✓ | ✓ | ✓ | - | ✓ | - | - |
| 154 | Dancing (Baratham) | - | ✓ | - | - | - | - | - | ✓ | - | - | - | - | - |
| 155 | Music (Carnatic) | - | ✓ | - | - | - | - | - | ✓ | - | - | - | ✓ | - |
| 156 | Drama & Theatre | - | ✓ | ✓ | ✓ | ✓ | - | - | ✓ | - | - | - | ✓ | - |
| 157 | Tamil (Language) | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | - |

# Vacancies of Secondary in Eastern Province
# (Tamil Medium)

| Sub No | Subject | Ampara | | | | Batticaloa | | | | | Trincomalee | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | AKKARAIPATTU | KALMUNAI | SAMMANTHURAI | THIRUKKOVIL | BATTICALOA | BATTICALOA CENTRAL | BATTICALOA WEST | KALKUDAH | PADDIRUPPU | KANTHALE | KINNIYA | MUTHUR | TRINCOMALEE | TRINCOMALEE NORTH |
| 158 | Guidance & Counselling | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | - |
| 159 | Special Education Unit | - | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | - | ✓ | - | ✓ | - |
| 160 | Science | - | - | - | - | - | - | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | - |
| 161 | Maths | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 162 | Tamil | - | ✓ | - | - | - | ✓ | ✓ | - | - | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 163 | Islam | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | ✓ | - |
| 164 | English | - | - | - | - | - | - | ✓ | ✓ | - | - | ✓ | - | - | - |
| 165 | History | - | - | ✓ | - | ✓ | - | ✓ | - | - | - | - | - | ✓ | ✓ |
| 166 | Saivam | - | ✓ | ✓ | ✓ | ✓ | - | ✓ | ✓ | ✓ | - | ✓ | ✓ | ✓ | ✓ |
| 167 | (Religion Subjects)Roman Catholic | - | - | ✓ | - | - | - | ✓ | ✓ | ✓ | - | - | - | ✓ | - |
| 168 | (Religion Subjects)Non Roman Catholic | - | ✓ | - | ✓ | - | - | ✓ | ✓ | ✓ | - | - | - | ✓ | - |
| 169 | Geography | ✓ | ✓ | - | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 170 | Civic Education | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | - | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 171 | Business & Accounting Studies | - | - | - | - | - | - | ✓ | ✓ | ✓ | - | ✓ | ✓ | ✓ | ✓ |
| 172 | Entrepreneurship Education | ✓ | ✓ | - | - | ✓ | - | - | ✓ | - | - | ✓ | - | - | - |
| 173 | Arabic | - | - | - | - | - | - | - | - | - | - | ✓ | - | ✓ | - |
| 174 | Second Language (Sinhala) | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 175 | Music (Carnatic) | - | - | - | - | ✓ | - | ✓ | ✓ | ✓ | - | ✓ | ✓ | - | ✓ |
| 176 | Art | ✓ | ✓ | ✓ | - | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 177 | Literature (Arabic) | - | ✓ | - | - | - | ✓ | - | - | - | - | ✓ | ✓ | ✓ | - |
| 178 | Dancing (Baratham) | - | - | - | - | ✓ | - | ✓ | - | ✓ | - | - | ✓ | - | - |
| 179 | Drama & Theatre | - | - | - | - | ✓ | - | ✓ | ✓ | ✓ | - | - | - | ✓ | ✓ |
| 180 | Literature (Tamil) | ✓ | ✓ | ✓ | - | - | ✓ | - | ✓ | - | ✓ | ✓ | ✓ | ✓ | - |
| 181 | Information & Communication Technology (ICT) | ✓ | ✓ | - | - | - | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 182 | Agriculture & Food Technology | - | ✓ | - | - | ✓ | - | - | - | ✓ | - | - | - | ✓ | - |
| 183 | Aquatic Bioresource Technology | - | - | - | - | ✓ | - | - | - | - | - | - | - | - | - |
| 184 | Art & Crafts | - | - | - | - | - | - | - | ✓ | - | - | - | - | - | - |
| 185 | Communication & Media Studies | ✓ | ✓ | - | - | ✓ | - | ✓ | ✓ | ✓ | - | ✓ | - | ✓ | - |
| 186 | Home Economics | - | - | - | - | ✓ | - | - | - | ✓ | ✓ | - | - | - | - |

| Sub No | Subject | Ampara | | | | Batticaloa | | | | | Trincomalee | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | AKKARAIPATTU | KALMUNAI | SAMMANTHURAI | THIRUKKOVIL | BATTICALOA | BATTICALOA CENTRAL | BATTICALOA WEST | KALKUDAH | PADDIRUPPU | KANTHALE | KINNIYA | MUTHUR | TRINCOMALEE | TRINCOMALEE NORTH |
| 187 | Practical & Technical skills (PTS) | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | - | ✓ | - | ✓ | ✓ | - |
| 188 | Design & Construction Technology | - | - | - | ✓ | - | - | - | ✓ | - | - | - | - | ✓ | - |
| 189 | Health & Physical Education | ✓ | - | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | - | ✓ | ✓ | ✓ | ✓ |

## Vacancies of Secondary in Eastern Province (Bi-Lingual)- Sinhala

| Sub No | Subject | Ampara | | | Trincomalee | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | AMPARA | MAHAOYA | DEHIATTAKANDIYA | KANTHALE | MUTHUR | TRINCOMALEE | TRINCOMALEE NORTH |
| 201 | Science | ✓ | - | ✓ | - | - | - | - |
| 202 | Maths | ✓ | - | ✓ | - | - | - | - |
| 203 | Geography | - | - | - | - | - | - | - |
| 204 | Civic | ✓ | - | ✓ | - | - | - | - |
| 205 | Business & Accounting | - | - | | - | - | - | - |
| 206 | ICT | - | - | ✓ | - | - | - | - |
| 207 | Communication & Media Studies | - | - | | - | - | - | - |
| 208 | Health & Physical Education | - | - | ✓ | - | - | - | - |

## Vacancies of Secondary in Eastern Province (Bi-Lingual) - Tamil

| Sub No | Subject | Ampara | | | Batticaloa | | | | | Trincomalee | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | AKKARAIPATTU | KALMUNAI | THIRUKKOVIL | BATTICALOA | BATTICALOA CENTRAL | BATTICALOA WEST | KALKUDAH | PADDIRUPPU | KANTHALE | KINNIYA | MUTHUR | TRINCOMALEE | TRINCOMALEE NORTH |
| 301 | Science | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | - | - | - | - | ✓ | - | ✓ | - |
| 302 | Maths | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | - | - | - | - | ✓ | - | ✓ | - |
| 303 | Geography | ✓ | ✓ | ✓ | ✓ | - | - | - | - | - | ✓ | - | - | - |
| 304 | Civic | ✓ | ✓ | ✓ | - | - | - | - | - | - | - | - | - | - |
| 305 | Business & Accounting | ✓ | | | - | - | - | - | - | - | - | - | - | - |
| 306 | ICT | ✓ | ✓ | ✓ | - | ✓ | - | - | - | - | ✓ | - | ✓ | - |
| 307 | Communication & Media Studies | - | ✓ | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 308 | Health & Physical Education | ✓ | - | ✓ | ✓ | - | - | - | - | - | ✓ | - | - | - |

குறிப்பு : "✓" எனும் குறியீடு வெற்றிடத்தைக் குறிக்கும்

**EX/Rec/22/02**

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பட்டதாரி பயிலுனர்களாக பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரிகளை கிழக்கு மாகாண மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவை, 3-I(அ) தரத்துக்கு மாவட்ட ரீதியாக ஆட்சேர்ப்பு செய்தல் – 2022**

**நிரந்தர வதிவிட மாவட்டம் : ................................ மாவட்டத்தில் வதியும் காலம் (வருடங்களில்) : ..........**

விண்ணப்பிக்கும் பாடம் : (அட்டவணை 01, 02 இற்கு அமைவாக குறிப்பிடவும்) விண்ணப்பிக்கும் மாவட்டம் :

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| | |

1. .......................................................

2. .......................................................

1.0. 1.1. முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர்: Rev./Mr./Mrs./Miss./ ......................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) (உதா : PERERA, A.B.C) ....................................................................................

1.2. முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) : ....................................................................................

1.3. முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ....................................................................................

1.4. பால் : (பெண் - F / ஆண் - M)
(உரிய எழுத்தை கூட்டினுள் இடவும்) ☐

1.5. தொலைபேசி இல. : ....................................................................................

2.0. 2.1. நிரந்தர முகவரி : ....................................................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

2.2. நிரந்தர முகவரி : ....................................................................................
(சிங்களத்தில்/தமிழில்)

2.3. அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி : ....................................................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

3.0. 3.1. தேசிய அடையாள அட்டை இலக்கம்.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

3.2. பிறந்த திகதி : ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3. 2019.12.31 ஆந் திகதியில் வயது,

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4.0. இனம் : சிங்களவர் ☐ இலங்கைத்தமிழர் ☐ முஸ்லிம் ☐ வேறு ☐
(உரிய கூட்டினுள் ✓ இடவும்)

5.0. கல்வித்தகைமைகள் :

5.1. க.பொ.த (சா/த) பரீட்சை பற்றிய விபரம் :

I. பரீட்சையின் வருடம் : .......................... II. பரீட்சை சுட்டிலக்கம் : ..........................

III. பெறுபேறு :

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

5.2. க.பொ.த (உ/த) பரீட்சை பற்றிய விபரம் :

I. பரீட்சையின் வருடம் : .......................... II. பரீட்சை சுட்டிலக்கம் : ..........................

III. பெறுபேறு :

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1. | | 3. | |
| 2. | | 4. | |

5.3 பட்டம் பற்றிய விபரம் :
- 5.3.1 பட்டம் : ..........................................................................................................
- 5.3.2 பல்கலைக்கழகத்தின் / நிறுவனத்தின் பெயர் : ........................................................................
- 5.3.3 பட்டம் பெற்ற திகதி :..........................................................................................
- 5.3.4 பட்டத்தின் பிரதான பாடம் / பாடங்கள் : ..........................................................................
- 5.3.5 பட்டத்தின் வகை : உள்வாரி ( ) வெளிவாரி ( ) (உரிய கூட்டினுள் ✓ இடவும்)

5.4 டிப்ளோமா பற்றிய விபரம் :
- 5.4.1 டிப்ளோமா : ..........................................................................................................
- 5.4.2 நிறுவனத்தின் பெயர் : ..............................................................................................
- 5.4.3 டிப்ளோமா பெற்ற திகதி : ..........................................................................................
- 5.4.4 டிப்ளோமாவின் கால அளவு : ........................................................................................

6.0 அரச / கிழக்கு மாகாண பொதுச்சேவை பற்றிய விபரம் :
- 6.1 திணைக்களம் / அலுவலகம் : ..........................................................................................
- 6.2 தற்போதைய பதவி : ..................................................................................................
- 6.3 இச்சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி : ............................................................................
- 6.4 முதல் நியமனத் திகதி : ..............................................................................................

7.0. நீங்கள் இலங்கை நீதிமன்றம் ஒன்றில் எப்போதாவது குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா?
அவ்வாறெனின் விபரத்தைக் குறிப்பிடுக. ……………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………………

**8.0 விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்ட விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்தி செய்யப்படாததன் அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாகச் சேர்க்கப்பட்டுள்ளதன் விளைவாக ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றேன். மேலும் இங்கு அனைத்து பகுதிகளையும் சரியாக பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானவை எனத் தெரியவந்தால் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் சாதாரண நேர்முகப்பரீட்சை நடாத்துதல் தொடர்பாக கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஈ) இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் எதனையும் பின்னராக மாற்றம் செய்யமாட்டேன்.

……………………………………
திகதி : …………………… விண்ணப்பதாரியின் கையொப்பம்

**9.0 விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :** (இவ்வறிவித்தலின் 3.5 இன்படி)

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு/திருமதி/செல்வி ……………………………….. என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் ……………………………. ஆந் திகதியில் இட்டார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும், அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………
திகதி : …………………….. கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரது கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின்
பெயர் : …………………………….
பதவி : ………………………………………………………….
முகவரி : …………………………………………………….
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

**11.0 திணைக்களத் தலைவரின் உறுதியுரை :** (அரச/கிழக்கு மாகாண பொதுச்சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கானது)

இத்திணைக்களத்தில் …........................................................................ பதவியில் கடமையாற்றும் திரு/திருமதி/செல்வி …........................................................................ அவர்களின் விண்ணப்பத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவரின் சேவைக்காலத்தில் எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கைகளும் அவர் மேல் இல்லையென்றும், சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றுக்கொண்டுள்ளார் எனவும், அவரால் தெரிவிக்கப்பட்டுள்ள மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் அவரின் சுயவிபரக்கோவையின்படி சரியெனவும், அவர் விண்ணப்பித்துள்ள பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து அவரை அப்பதவிக்கு விடுவிக்க முடியும் என்பதையும் இங்கு அவரால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் யாவும் சரியானவை என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

………………………………………
திகதி : …………………….. திணைக்களத்தலைவரின் கையொப்பம்

கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் முழுப் பெயர் : …………………………….
பதவி : ………………………………………………………….
முகவரி : …………………………………………………….
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)